# கிழக்கு மாகாண நீர் வழங்கல் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டும் (கடன் இல எஸ்எல்பி 98) - 2010

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுபபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் நடைபெறும் வேலைகளாக ஏற்பட்ட ரூபா 13,190,326 ஆகும்.

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூன் 28 ஆந்திகதிய செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 6 ஆம் இணைப்பின் 4 ஆம் பிரிவின்படி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்திற்காக புறம்பான கணக்குகளைப் பேண வேண்டும். எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக புறம்பான கணக்கெதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 2012 யூன் 30 வரை உப நிதியளிப்பு உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூர் நிதிகள் ஊடாக 2010 இல் ஏற்பட்டிருந்த நிர்மாண வேலைகள் ரூபா 2,589,341 தொகையான செலவினங்களிற்காக ஜேஐசீஏ இடமிருந்து மீளளிப்புக்களை பெறுவதற்கு செற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட கணக்குகள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,288,302 தொகையான செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லையென கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது.

(உ) நீர் வழங்கல வடிகாலமைப்பு அமைச்சால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, செயற்திட்டத்திற்கான உள்ளூர் நிதிகள் ஊடாக ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டக் கணக்குகளின்படி, இது ரூபா 7.03 மில்லியன் மாத்திரமேயாக இருந்ததுடன் மீதி தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.